<u>முதன்மை  மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,பொள்ளாச்சி</u>

நாள்: 24.03.2025          அ.வ.எண்.237/2020       வா.சா.1  ஜெயந்தி

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு  பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1) எனது முதல் விசாரணைக்கான நிரூபாண பிரமான பத்திரிக்கைான விபரங்களை யார் சொன்னாது என்றால் நான்தான் சொன்னேன்.

2) இவ்வழக்கை முதலில் எனது தகப்பனார் தாக்கல் செய்து அவர் இறந்துபிறகு அவரது வாரிசுகளான நாங்கள் நடத்திவருகிறோம் என்றால் சரிதான்.

3) வழக்கு சொத்து எங்களுக்கு எப்படி பாத்தியப்பட்டது என்றால் எங்களது தயாரின் தாயருக்கு அதாவது எங்களது பாட்டிக்கு சொந்தமானது. எங்களது பாட்டி குருவம்மாளுக்கு அந்த சொத்து உயில்படி பாத்தியப்பட்டது என்றால் சரிதான்.

4) வழக்கு சொத்திற்கான மூலபத்திரத்தை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

5) குருவம்மாளின் சொத்தைதான் எனது தகப்பனார் கிரையம் பெற்றார் என்றால் சரியல்ல. வழக்கில் கிடைத்தது. குருவம்மாளுக்கு பாத்தியப்பட்ட சொத்துதான் வழக்கு சொத்து என்றால் சரிதான்.

6) குருவம்மாளுக்கு என்ன விஸ்தீரணம் பாத்தியப்பட்டதோ அதுதான் எங்களது பாத்தியப்பட்டது  என்றால் சரிதான். இந்த சொத்தைதவிர வேறு சொத்துக்கள் எதுவும் எங்களுக்கு இல்லை என்றால் சரிதான்.

7) சொத்து பற்றிய முழுவிபரங்களும் எங்களுக்கு தெரியுமா என்றால் தெரியும். குருவம்மாளுக்கு பாத்தியப்பட்ட சொத்து காலியிடமா என்றால் இல்லை. காலியிடமும் வீடும் சேர்ந்தது.

8) வழக்கு சொத்தின் முன்பகுதியில் 6 விட்டம் போட்ட 5 அங்கன வாசல் வீடு உள்ளது என்றால சரிதான்.